செ.வெ.எண்:26/2019 நாள்:08.08.2019

# திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் நவீன விவசாயம் குறித்த கண்காட்சி நடைபெற்றது.

---

திண்டுக்கல் வேலு மஹாலில் இன்று (08.08.2019) நவீன விவசாயம் குறித்த கண்காட்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள், இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.வி.தட்ஷிணாமூர்த்தி.இ.ஆ.ப., ஆகியோர் துவக்கி வைத்தனர்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-**

தமிழ்நாடு அரசு சார்பில் விவசாயிகளின் வாழ்வில் ஒளியோற்றும் வகையில் பயிர்காப்பீடு, நிவாரண உதவித் தொகை மற்றும் மானியத் உதவித் தொகை என பல்வேறு நலத்திட்டங்களை வழங்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் மா, ஆயக்குடி பகுதிகளில் கொய்யா, சிறுமலை, விருப்பாட்சி பகுதிகளில் வாழை, பழனி மலைப் பகுதிகளில் கேரட், உருளைக் கிழங்கு, பூண்டு ஆகியவைகள் பயிரிடப்பட்டு வேளாண்மையில் திண்டுக்கல் மாவட்டம் தனி இடத்தை பெற்றுள்ளது. பூண்டி, கிளாவாரை பகுதியில் பயிரிடப்படும் மருத்துவகுணம் கொண்ட பூண்டுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

நமது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான நிலங்கள் தரிசு நிலங்கள் ஆகும். இந்த நிலங்களை கொண்டுள்ள விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கு MSDA எனப்படும் மானவாரி தரிசு நிலமேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது, 2019-20-ம் நிதியாண்டில் சாணார்பட்டி, நத்தம், நிலக்கோட்டை, பழனி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி வட்டாரங்களில் 14 தொகுப்புகள் 14000 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு, இதில் பங்குபெறும் விவசாயிகளுக்கு உழவு செய்வதற்கு மானியம் சிறுதானியம், பயறுவகை, நிலக்கடலை, எள்,பருத்தி போன்ற பயிர்களை சாகுபடி செய்ய விதை உயிர் உரங்களை மானியத்தில் வழங்கப்படும். அரசால் வேளாண் பெருமக்களுக்கு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை முழுமையாக அறிந்து கொண்டு பயன் பெறகேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

**இந்நிகழ்ச்சியில் இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.வி.தட்ஷிணாமூர்த்தி.இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-**

தமிழக அரசு விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறுதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, விவசாயிகளை அதன் மூலம் பயன்பெற செய்கிறது. குறிப்பாக, கூட்டுப்பண்ணையத்திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு, விவசாய உற்பத்திக்குழு அமைக்கப்பட்டு, அதில் 20,000-க்கும் மேற்பட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு அதன் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி அதன் மூலம் நவீன வேளாண் கருவிகள் மூலம் விவசாயம் செய்து பயன் பெறுவதற்கு அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று ஒருங்கிணைந்த விவசாயபண்ணைத் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இத்திட்டம் தமிழகத்தில் 5 மாவட்டங்களில் செயல்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் விவசாயிகள் விவசாயத் தோடு கால்நடைகளான ஆடு, மாடு மற்றும் கோழிகள் உள்ளிட்டவைகளை வளர்த்து அதன் மூலம் பொருளீட்டும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் 60 சதவீத நெல் உற்பத்தி செய்து வருகிறார்கள். நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள் லாபம் ஈட்டும் வகையில் திருந்தியநெல் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம் அதிக மகசூல் பெற்று விவசாயிகள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தற்போது விவசாயத்திற்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதால், விவசாயத்தை நவீனபடுத்துவதற்கென புதியதாக வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களை உபயோகப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நீர்பற்றாக்குறை, மக்கள் தொகை பெருக்கம், உணவுகளின் தேவை அதிகரிப்பு ஆகியவைகளின் அடிப்படையில் பொதுமக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு, விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் அதிகலாபம் ஈட்டலாம். மேலும், நீர்பற்றாக்குறை உள்ள சமயங்களில் கம்பு, தினை உள்ளிட்ட தானியங்களை உற்பத்தி செய்து பயன்பெறும் வகையில் விவசாயிகள் தானியங்கனை பயிரிட வேண்டும். குறிப்பாக கம்பு, தினை வகைகள் போன்ற தானியங்களுக்கு சந்தையில் நல்ல மதிப்பு உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மக்கா சோளம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு படைப்புழுக்களின் தாக்கத்தால் மக்காசோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தொகை அரசால் வழங்கப்பட்டு அவர்களின் வங்கி கணக்கில் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பயன் பெறும் வகையில் உழவன் செயலி அரசால் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்துப்பட்டு வருகிறது. விவசாயிகள் இன்றைய நவீன காலத்திற்கு ஏற்றவகையில், பல்வேறு நவீன திட்டங்கள் மற்றும் வேளாண் கருவிகளை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வண்ணம் இன்றைய தினம் திண்டுக்கல் மாவட்டத்தில் நவீன விவசாய கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் விவசாயத்திற்கான நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் பார்த்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும். ஏன இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.வி.தட்ஷிணாமூர்த்தி. இ.ஆ.ப.,அவர்கள் பேசினார்..

இந்தநிகழ்ச்சியில், தலைவர் (FICCI) திருமதி.கவிதா தத் அவர்கள், துணைவேந்தர் (தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை) டாக்டர்.எம்.குமார் மற்றும் இணைத் தலைவர்(FICCI) திரு.டி.ஆர்.கேசவன் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்திவெளியீடு:- செய்திமக்கள் தொடர்புஅலுவலர்,திண்டுக்கல்.**

---